

நாகப்பட்டினம் மாவட்ட திமுக அவை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முன்னாள் திருமருகல் ஒன்றிய செயலாளர் ப.செல்வம் அமைச்சர் சிவ.வீ. மெய்ய நாதனை சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் தமிழக மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கவுதமன், திருமருகல் வடக்கு ஒன்றிய செயலாளர் செல்வ செங்குட்டுவன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.



திருச்சியில் அமைச்சர் கே என் நேரு 10 நாட்கள் நடைபெறும் 108 திவ்ய தேச பெருமாள் தரிசன நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய மாவட்ட பொறுப்பாளர் வைரமணி மாநகராட்சி மேயர் அன்பழகன் வழக்கறிஞர் பாஸ்கர் மாவட்ட துணை செயலாளர் செல்லம் விஜயா ஜெயராஜ்பகுதி செயலாளர் மோகன் தாஸ், சீனிவாச பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வேதாரண்யம் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையால் உப்பு உற்பத்தி மீண்டும் பாதிப்பு

**வேதாரண்யம்,அக்.02-**

வேதாரண்யம் அருகே அகஸ்தியன்பள்ளி, கோடியக்காடு, கடினல்வயல் போன்ற கிராமங்களில்; 9 ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது இதில் மூவாயிரம் ஏக்கரில் மட்டும் சிறு குறு உப்பு உற்பத்தியாளர்களால் சாப்பாட்டு உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது

இத்தொழிலை நம்பி இருபதாயிரம் தொழிலாளர்கள் உப்பு உற்பத்தியாளர்கள் உள்ளனர் இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு ஆந்திரா கர்நாடகா மகாராஷ்டிரா போன்ற வெளி மாநிலங்களுக்கு லாரிகள் மூலம் உப்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது

இந்த ஆண்டு துவக்கில் பெய்த மழையின் காரணமாக உப்பு உற்பத்தி தொடங்குவது தாமதப்பட்டது கடந்த மே, ஜுன், ஜுலை ஆகிய மாதங்களில் வெப்பம் அதிக இருந்ததால் உப்பு உற்பத்தி நடைபெற்று வந்தது கடந்தஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் விட்டு விட்டு பெய்த மழையால் உப்பு உற்பத்தி செய்வது பாதிக்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த பத்து நாட்களாக மழை இல்லாததால்; மழையால் பாதிக்கப்பட்ட உப்பளங்களில் மீண்டும் உப்பு உற்பத்தி நடைபெற்று வந்தது

கடந்த இரண்டு நாட்களாக இரவில் பெய்த மழையால் மீண்டும் உப்பளங்களில் மழைநீர் தேங்கியாதல் உப்பு உற்பத்தி நிறுத்தபட்டுள்ளது இதனால் 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்து வருவாய்க்கு வழியின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்

இந்த ஆண்டு தொடர் மழையின் காரணமாக உப்பு உற்பத்தி குறைந்து 20 ஆயிரம் மெட்ரிக் டன் உப்பு மட்டுமே கையிருப்பில்; உள்ளது உற்பத்தி செய்யப்பட்ட உப்பு குறைவாக உள்ளதால் இந்த ஆண்டு உப்புக்கு தட்டுப்பாடு ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது தற்போது ஒரு டன் சாதாரண உப்பு இரண்டாயிரம ரூபாய்க்கும் முதல் தர வெள்ளை உப்பு மூவாயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஸ்பீட் மற்றும் ஹாக்கி ஸ்கேட்டிங் மாநில அளவில் பங்கேற்க தேர்வு

**திருச்சி,அக்.02-**

திருச்சி மண்டல ரோலர் ஸ்கேடிங் அசோசியேஷன் (ஜி ஸிஸிஷிகி) மூலம் பல்வேறு வயது பிரிவுகளில் உள்ள சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கு மாநில போட்டிகளில் பங்கேற்க ஸ்பீட் மற்றும் ஸ்கேட்டிங் ஹாக்கி தேர்வுகளை ஏற்பாடு செய்துள்ளது. போட்டிகள் அக்டோபர் 08 மற்றும் 09, 2022 - சனி மற்றும் ஞாயிறு தினங்களில் கூத்தூரில் உள்ள ஸ்ரீ விக்னேஷ் வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும்.

ஆர்வமுள்ள அனைத்து ஸ்கேட்டர்களும் கிளப்புகளும் இந்த இணைப்பில் அக்டோபர் 05 அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவு செய்யலாம். இந்த விவரங்களை திருச்சி சங்கத் தலைவர் அமிர்தகாசி தெரிவித்தார். மேலும் விவரங்களுக்கு 94434 12120 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.

# தோப்புத்துறை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம்

**வேதாரண்யம்,அக்.02-**

வேதாரண்யம் அருகே தோப்புத்துறை ஊராட்சி ஒன்றிய இந்து தொடக்கப் பள்ளியில் பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம் பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் நிஷாந்தி தலைமையில் நடைபெற்றது தலைமை ஆசிரியர் தெட்சிணாமூhத்தி, துணைத் தலைவர் உமாமகேஸ்வரி, நகர்மன்ற உறுப்பினர் அம்சவள்ளி கோவிந்தராஜிலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரிய பிரதிநிதி மாணிக்கம் வரவேற்றார்.

கூட்டத்தில் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மூலம் பழுதடைந்துள்ள பள்ளி கதவு, ஜன்னல்கள் ஆகியவற்றை சீரமைக்க வேண்டும். கட்டிடங்களுக்கு வண்ணம் தீட்டித் தர வேண்டும். காலாண்டு தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பள்ளி ஆசிரியர்கள் மற்றும் இல்லம் தேடிக் கல்வி ஆசிரியர்கள் இணைந்து சிறப்பு கவனம் செலுத்துவது, இந்த மாதம் நடைபெறும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் புதிய கணினி வழங்குவது போன்ற பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பள்ளி மேலாண்மைக் குழு கல்வியாளர் ஆர்த்தி நன்றி கூறினார்.

# திருமாந்துறை அருகே சுங்கசாவடி ஊழியர்கள் திடீர் உண்ணாவிரத போராட்டம்



பெரம்பலூர் அக்: 2

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதிக்கு உட்பட்ட திருமாந்துறை கிராமத்தில் அமைந்துள்ள சுங்கசாவடி (டோல் பூத்) ஊழியர்கள் சுமார் 30 நம்பர்கள் திடீரென உண்ணாவிரதம் போராட்டத்தில் ஈடுபட்டனர் கடந்த 2009 ஆம் ஆண்டு திருமாந்துறை சுங்கச்சாவடி பணியில் சுமார் 70 நம்பர்கள் பணியாற்றி வந்துள்ளனர் இந்த நிலையில் கடந்த 15 வருடமாக பணியாற்றிய நபர்களை எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் எந்த விதமான தகவலும் கொடுக்காமல் சுமார் 30 நபர்களை நீக்கியதாகவும் தாங்கள் இனி வேலைக்கு வர வேண்டாம் என்று கூறியதாகவும் கூறப்படுகிறது எதன் அடிப்படையில் நீக்கினார்கள் எந்த தகவலும் பணியாளர்களை கொடுக்காதது ஏன் என்றும் நீக்கியமைக்கு காரணம் தெரிவிக்க வேண்டும் என்று சுங்குச்சாவடி பணியாளர்கள் இன்று அதிகாலை முதல் தொடர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் தகவல் அறிந்த திமுக அதிமுக பாமக விடுதலை சிறுத்தை கட்சிகள் உள்ளிட்ட பல கட்சிகள் ஆதரவு தெரிவித்து இன்று அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர் இதில் விடுதலை சிறுத்தைகள் மண்டல பொறுப்பாளர் கிட்டு, விடுதலை சிறுத்தை மாநில செயலாளர் வீர சங்கலன், திமுக வேப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் மதியழகன்.அதிமுக வேப்பூர் வடக்கு ஒன்றி செயலாளர் செல்வமணி. திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் கவியரசன் ,லப்பை குடிக்காடு நகராட்சி தலைவர் ஜாகிர் உசேன் ,முன்னாள் லப்பைகுடிக்காடு நகராட்சி தலைவர் சமுசுதீன், திமுக ஒன்றிய கவுசிலர்கள் திருமாந்துறை கருப்பையா, பெண்ணங்கோணம் பழனிவேல் ,சிறுமத்தூர் தேவா, ஒகளூர் கொடியரசு, வேப்பூர் ஒன்றிய குழு துணை தலைவர் செல்வராணி வரதராஜன், மற்றும் பென்னங்கோணம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் ஆறுமுகம், சுப்பிரமணியன் ,ஆடுதுறை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மலர்மன்னன் ,பாமக மாவட்ட செயலாளர் ராஜேந்திரன் ,பாமக மாநில செயல் குழு உறுப்பினர் ராஜதுரை, பாமக மாவட்ட விவசாய அணி செயலாளர் சின்னதுரை, பாமக வேப்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் முருகன், பாமக மாவட்ட துணை தலைவர் ரமேஷ் ,பாமக வேப்பந்தட்டை ஒன்றிய செயலாளர் பூபதி ,காங்கிரஸ் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் ரமேஷ் ,விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட துணை அமைப்பாளர் பொன் சங்கர் ,அதிமுக தகவல் தொழில்நுட்ப ஒன்றிய செயலாளர் சத்தியாராஜேஷ்.அமுமுக கிளை செயலாளர் திருமாந்துறை சக்திவேல் .விசிக கிளை செயலாளர் திருமாந்துறை கணேசன் .திமுக கிளை செயலாளர்கள் சரவணன் . கிருஷ்ணன் ,செந்தில் ,அதிமுக கிளை செயலாளர் திருமாந்துறை ராஜ்குமார் ,திமுக பென்னங்கோணம் கிளை செயலாளர் பொன்னுசாமி, அதிமுக திருமாந்துறை ஐ டிவி ஊராட்சி செயலாளர் அஜய். மற்றும் சுங்கச்சாவடி பணியாளர் கூட்டமைப்பு மாநில துணைச் செயலாளர் விஜயகுமார் . சுங்கச்சாவடி பணியாளர் கூட்டமைப்பு திருமந்துறை கிளை தலைவர் மணிகண்டன், உள்ளிட்ட பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டு தங்களின் ஆதரவை தெரிவித்தனர் இங்கு பணி புரியும் பணியாளர்களை எங்கோ ஒரு பகுதியில் நடக்கும் சம்பவத்திற்கு சுங்க சாவடியில் குற்றவாளிகள் பிடிக்கப்பட்டால் இங்கு பணி புரியும் பணியாளர்களை சாட்சியாக மட்டும் பயன்படுத்திக் கொள்ளும் நிர்வாகம் இவர்களுக்கு வாழ்வாதாரத்தை பார்க்காமல் நீக்குவது எப்படி என்றும் கேள்வி எழுப்புகின்றனர் மேலும் அதிகாலை முதல் மாலை வரை சுங்க சாவடி வழியாக அனைத்து அனைத்து வாகனங்களும் இலவசமாக சென்றது இதனால் அங்கு போலீஸ் குவிக்கப்பட்டது இதனால் அப்பகு பதட்டம் காணப்பட்டது

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# ரத்த கொடையாளர்களுக்கு கேடயம் வழங்கல்



**அரியலூர்,அக்.02-**

அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், தேசிய தன்னார்வ குருதி கொடை தினத்தை முன்னிட்டு குருதி கொடையாளர்களுக்கு கேடயங்கள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில், அதிக முறை ரத்த தானம் செய்த கொடையாளர்கள் 5 பேர், சிறப்பாக ரத்ததான முகாம் நடத்திய மருத்துவர்கள், வட்டார சுகாதார மேற்பார்வையாளர், சுகாதார ஆய்வாளர்கள், பேராசியர்கள் 8 பேர் என 13 பேருக்கு கேடயங்களை கலெக்டர் வழங்கி, ரத்ததான முகாமை தொடங்கி வைத்தார். ரத்ததான முகாமில் 30 பேர் கலந்து கொண்டு ரத்ததானம் செய்தனர். நிகழ்ச்சியில், அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் முத்துகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை இணை இயக்குநர் அசோகன், மாவட்டத் தலைவர் ஸ்டீபன், இந்திய செஞ்சிலுவை சங்க மாவட்டச் செயலாளர் ரமேஷ், மருத்துவமனை கண்காணிப்பாளர் குழந்தைவேலு, இணை பேராசிரியர்கள் சாய்ஸ்ரீதேவி, லதா, குருதி வங்கி மருத்துவ அலுவலர் சைனி மற்றும் இருப்பிட மருத்துவ அலுவலர்கள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை**
**மனு எண் அ2/3504/2022**

பெ.கோடங்கி, த/பெ.பெருமாள், வேலாங்காட்டுப்பட்டி, சிவாயம் வடக்கு கிராமம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கரூர் மாவட்டம்.

– மனுதாரர்

– எதிர் –

1.வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம்
2.சார்பதிவாளர், குளித்தலை.

– எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மனுதாரர் பெ.கோடங்கி, த/பெ.பெருமாள் என்பவர் தனது தந்தை "பெருமாள்" த/பெ. பொறைக்கிலான் என்பவர் கடந்த 13.04.2008 அன்று மேற்படி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர்கள் பதிவு செய்யக் கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தர வாகிவிடும் என்பதை அறியவும்.

**S.பாஸ்கர்,B.A.B.L.,**
**வழக்கறிஞர்/நோட்டரி பப்ளிக், குளித்தலை.**

# விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா

**ஆடுதுறை,அக்.02-**

தமிழக அரசின் நிலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா திருச்சேறை ஆர். கே.ஆர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் செ. ராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது இந்த விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் பள்ளி தலைமை ஆசிரியர் ராயர் வரவேற்றார்

இந்த விழாவில் தமிழக அரசின் தலைமை கொறடா முனைவர் கோவி. செழியன் திருவிடைமருதூர் ஒன்றிய பெருந்தலைவர் சுபா திருநாவுக்கரசு ஊராட்சி மன்ற கூட்டமைப்பின் தலைவர் சி அம்பிகாபதி திருச்சேறை ஊராட்சி மன்ற தலைவர் சங்கர் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சரவணன் ஒன்றிய குழு உறுப்பினர் ஜெயக்குமார் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் வீரமணி ஊராட்சி மன்ற உறுப்பினர் செல்வகுமார் சுப்பிரமணியன் பந்தி சுரேஷ். சிவகுமார். நவாஸ் கான் .பந்தி சாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர் இந்த விழாவில் கலந்து கொண்டஅனைவருக்கும் பள்ளியின் பட்டதாரி ஆசிரியர் ராஜ்குமார் நன்றி கூறினார் விழாவில் சுமார் 71 மாணவ மாணவியருக்கு மிதி வண்டிகள் வழங்கப்பட்டது.

# குடவாசலிலேயே கல்லூரிக்கு நிரந்தர இடம் தேர்வு செய்து புதிய கட்டிடங்களை தமிழக அரசு கட்டி கொடுக்க வேண்டும்

## போராடும் மாணவர்களை சந்தித்த இரா.காமராஜ் எம்எல்ஏ பேட்டி



**திருவாரூர்,அக்.02-**

திருவாரூர் மாவட்டம் குடவாசல் பகுதியில் எம்ஜிஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கடந்த எட்டு வருடங்களாக அப்பகுதியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளியில் உள்ள கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது. இதில் சுமார் 600- க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்நிலையில் அந்த கல்லூரிக்கு நிரந்தர இடத்தை தேர்வு செய்து கல்லூரி கட்டிட பணியை உடனடியாக தொடங்க வேண்டும் என கோரிக்கை வலுத்து வருகிறது. நன்னிலம் தொகுதியில் உள்ள குடவாசல் கல்லூரிக்கு வேறு ஒரு தொகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அந்த இடத்திற்கு குடவாசலில் இருந்து சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலையும் உள்ளது எனவும் மேலும் கல்லூரிக்கு தேவையான இடத்தை நன்னிலம் தொகுதியில் உள்ள குடவாசல் பகுதியில் தேர்வு செய்ய வேண்டும் என வலியுறுத்தி கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு வட்டாட்சியர் அலுவலகத்தை மாணவ மாணவிகள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் அதேபோல கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு பேரணியாகச் சென்று மனு அளித்தனர்.நேற்று குடவாசல் பேருந்து நிலையத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் தரையில் அமர்ந்து தொடர்ந்து 2வது நாளாக தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நன்னிலம் அதிமுக சட்ட மன்ற உறுப்பினரும் முன்னாள் தமிழக உணவுத்துறை அமைச்சருமான ஆர்.காமராஜ் மாணவ,மாணவிகளை சந்தித்து ஆதரவு தெரிவித்து தரையில் அமர்ந்து தொடர் காத்திருப்பு போராட்டத்தில் கலந்து கொண்டார். அப்போது செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் காமராஜ் கூறியதாவது, குடவாசலில் இருந்து வேறு இடத்திற்கு கல்லூரியை எடுத்துச் செல்வது நியாயத்திற்கு புறம்பானது.குடவாசலிலே கல்லூரி அமைய பெற வேண்டும்.இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.எந் நிலையிலும் இந்த மாணவ, மாணவிகளுக்கு ஆதரவாக இருப்பேன்.சட்டமன்றத்தில் இதைப் பற்றி பேசிய பொழுது,அந்தப் பகுதியில் மக்கள் மற்றும் மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப கல்லூரி அமைக்கப்படும் என உயர்க்கல்வி அமைச்சர் பொன்முடி பதில் அளித்தார். குடவாசலிலேயே கல்லூரி அமைய வேண்டும் என்று இப்பகுதி மக்களும்,கல்லூரி மாணவர்களும் போராடிவரும் நிலையில் வேறு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.இந்த முயற்சியை உடனடியாக கைவிட வேண்டும்.புதிய இடம் தேர்வு செய்ய நாங்களும் உறுதுணையாக இருப்போம்.புதிய கட்டிடம் கட்ட கையகப்படுத்தும் இடத்திற்கான நில மதிப்பு அரசின் ஒதுக்கீட்டை விட அதிகமாக இருந்தால் அதனையும் நன்கொடையாளர்கள் மூலம் ஈடு செய்ய தயாராக இருக்கிறோம்.இவ்வாறு முன்னாள் அமைச்சர் இரா.காமராஜ் எம்எல்ஏ என பேட்டி அளித்தார்.நிகழ்வின் போது அதிமுக ஒன்றிய செயலாளர்கள் பாப்பா சுப்பிரமணியன், ராஜேந்திரன்,நகர செயலாளர் சாமிநாதன், ஒன்றியக் குழுத் தலைவர் கிளாரா செந்தில்,துணைத் தலைவர் தென்கோவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



# சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு 80 வயதை கடந்த மூத்த வாக்காளர்கள்: கலெக்டர் வாழ்த்து மடலை வழங்கி பெருமைப்படுத்தினார்



**புதுக்கோட்டை,அக்.02-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்;சியரகத்தில், (01.10.2022) சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு, 80 வயதை கடந்த மூத்த வாக்காளர்களுக்கு, இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் வெளியிட்டுள்ள வாழ்த்து மடலை, புதுக்கோட்டை கலெக்டர் கவிதா ராமு, வழங்கி பெருமைப்படுத்தினார். பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது;

புதுக்கோட்டை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் மொத்தம் 13,45,297 வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளார்கள். இதில் 80 முதல் 99 வரையுள்ள வயதில் 27,161 வாக்காளர்களும், 100 வயதை கடந்த 168 வாக்காளர்களும் என மொத்தம் 27,329 மூத்த வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளார்கள்.

தேர்தல் செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்கும், தேர்தல்களை சுதந்திரமான, நியாயமான, அனைவரையும் உள்ளடக்கியதான, அணுகக்கூடிய மற்றும் பங்கேற்கத்தக்க வகையில் அதனை நேர்மையாக நடத்துவதற்கு பொறுப்புள்ள மூத்த வாக்காளர்களால் தான் நமது நாடு ஜனநாயக நாடாக இவ்வுலகில் செழித்து ஒளிர்கிறது.

அனைத்து மூத்த குடிமக்களும் உங்களது தேர்தல் பங்கேற்பினைத் தொடர்வதன் மூலம் இந்திய ஜனநாயகத்தில் இளம் தலைமுறையினரின் நேர்மையான பங்கேற்பு, இந்திய ஜனநாயகத்தில் இளம் தலைமுறையினரின் நேர்மறையான பங்களிப்பிற்கு முன்மாதிரியாக திகழ்வதில் பெருமிதம் கொள்கிறோம். மூத்த குடிமக்கள் அவர்களது ஜனநாயக கடமைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதிக அளவிலான தேர்தல் பங்கேற்பினை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொருவருக்கும் படிவம் 12னு-ஐ நிரப்பி அவரவர் வீட்டிலிருந்து வாக்காளிக்கும் வசதியினை இந்திய தேர்தல் ஆணையம் ஏற்படுத்தி உள்ளது.

எனவே மூத்த வாக்காளர்களாகிய நீங்கள் ஜனநாயக செயல்பாடுகளில் தொடர்ந்து பங்கேற்று நமது நாட்டின் இளைஞர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து இந்திய ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டும் என கலெக்டர் கவிதா ராமு, தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, வருவாய் கோட்டாட்சியர்கள் முருகேசன் (புதுக்கோட்டை), சு.சொர்ணராஜ் (அறந்தாங்கி), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.தங்கவேல், வட்டாட்சியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுப் பணிகள் குறித்து பயிற்சி கலெக்டர் தொடங்கி வைத்தார்





**திருச்சி,அக்.02-**

திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து, முதல் நிலை மீட்புப் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான பயிற்சியினை கலெக்டர் மா.பிரதீப் குமார், (01.10.2022) தொடங்கி வைத்துப் பேசினார்.

வடகிழக்குப் பருவமழையினை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகளை அலுவலர்கள், பணியாளர்கள் திட்டமிட்டு சிறப்பாக மேற்கொள்ளவும், தன்னார்வலர்கள் சிறப்பான முறையில் தங்களது சேவையினை வழங்கிடவும் கலெக்டர் அறிவுரைகள் வழங்கிப் பேசினார். இந்நிகழ்வில் வட்டாட்சியர் சித்ரா மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட கல்வி அலுவலகங்கள் கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி திறந்து வைத்தார்



**அரியலூர்,அக்.02-**

அரியலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் செயல்படவுள்ள மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி) மற்றும் மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்) ஆகிய அலுவலகங்களை கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி, (01.10.2022) திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றினார்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா அவர்கள் முன்னிலை வகித்தார். பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நிர்வாக சீரமைப்பு காரணமாக மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கக் கல்வி), மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை) மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்) என செயல்பட தமிழக அரசால் ஆணையிடப்பட்டது. அதன் அடிப்படையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கப் பள்ளி) மற்றும் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கான (தனியார் பள்ளிகள்) இரண்டு அலுவலகங்கள் மாவட்ட ஆட்சியத்தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மாவட்டக் கல்வி அலுவலகம் (தொடக்கப் பள்ளி)-யின்கீழ் அரியலூர் மாவட்டத்திலுள்ள 50 நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளும், 489 தொடக்கப் பள்ளிகளும் என மொத்தம் 539 பள்ளிகள் செயல்படும். மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்)-யின்கீழ் அரியலூர் மாவட்டத்திலுள்ள மெட்ரிக் பள்ளி மற்றும் சி.பி.எஸ்.சி பள்ளிகளைச் சேர்ந்த 118 பள்ளிகள் செயல்படும்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தி.விஜயலெட்சுமி, மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கப் பள்ளி) அம்பிகாபதி, மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளி) (பொ) சிவமணி, மாவட்டக் கல்வி அலுவலர் (இளநிலை) செல்வவிநாயகம் மற்றும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருமயம் அருகே அரிமளத்தில் சிசிடிவி அமைத்த இளைஞர்களுக்கு பாராட்டு



**பொன்னமராவதி,அக்.02-**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே அரிமளத்தில் உள்ள முக்கிய வீதிகளில் அடிக்கடி விபத்து ஏற்பட்டதோடு திருட்டு சம்பவங்களும் நடைபெற்று வந்தது.இதனை தடுக்க சிசிடிவி அமைக்க காவல் துறையினர் கோரிக்கை விடுத்தனர்.இதனையடுத்து அப்பகுதி இளைஞர்கள் ஒன்று கூடி இளைஞர்களிடையே நன்கொடை வசூல் செய்து நான்கு சிசிடிவி காமிராக்களை ஊரின் மையப்பகுதியில் வைத்தனர். இதனை அரிமளம் காவல் ஆய்வாளர் திறந்து வைத்தார்.

இதனால் அப்பகுதியில் குற்றச்சம்பவங்கள் குறையும் எனவும் அனைத்து கடைகளிலும் சிசிடிவி அமைக்க விழிப்புணர்வு ஏற்படுத்துவோம் எனவும் அப்பகுதி இளைஞர்கள் தெரிவித்தனர்.மேலும் சிசிடிவி அமைத்த இளைஞர்களுக்கு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் அரிமளம் காவல்துறையினர் நன்றி தெரிவித்தனர்.

# சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு கலெக்டர் தலைமையில் உறுதிமொழி ஏற்பு



**தஞ்சாவூர் ,அக்.02-**

தஞ்சாவூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தலைமையில் (01.10.2022) அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

தொடர்ந்து கலெக்டர் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற முதியோர்களுக்கு பரிசுகளை வழங்கி உறுதிமொழி

“இந்திய குடிமகன் குடிமகளாகிய நான், முதியோர்களை குடும்பத்தில் நல்ல முறையில் அரவணைப்போடு பராமரித்திடுவேன் எனவும், மனோரீதியாகவும் உடல் ரீதியாகவும் காயப்படுத்தும் தகாத வார்த்தைகளை உபயோகிக்க மாட்டேன் எனவும், அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

பொது இடங்களான மருத்துவமனை, வங்கி, பேருந்து போன்ற இடங்களில் முதியோர்களுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களுக்கெதிரான கொடுஞ்செயல்கள், வன்முறைகள் எவ்விதத்திலும் இழைக்கப்படுவதனை தடுத்திட பாடுபடுவேன் என உளமாற உறுதி கூறுகிறேன்.”

என்ற உறுதிமொழி வாசிக்க அனைத்து அரசு அலுவலர்களும் அதனை பின் தொடர்ந்து வாசித்தனர்.பின்னர் கலெக்டர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., தெரிவித்ததாவது:-

சர்வதேச முதியோர் தினம் அனுசரிப்பதை கொண்டாடும் விதமாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சி தலைவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 100 வயதிற்கு மேலான வாக்காளர்களை அவரது இல்வங்களில் அந்தந்த வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் இப்பாராட்டுச் பாராட்டும் சான்றிதழ்களை வழங்கியும், பொன்னாடை போர்த்தியும் கௌரவம் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் ஆதரவற்ற முதியோர்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொண்டு அவர்களின் நலன் காக்க சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் ஆதரவற்ற முதியோர்களுக்கான இல்லங்கள், தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு செயல்படுத்தப்பட்டு வரும் முதியோர் இல்லங்கள் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு சட்டம் 2007 விதிகள் 2009 பிரிவு 12 (1-3) கீழ் பதிவு செய்து நடத்தப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 20 முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகிறது. இதுவரை 19 முதியோர் இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1 முதியோர் இல்லம் பதிவு செய்யப்பட நடவடிக்கையில் உள்ளது. அனைத்து முதியோர் இல்லங்களில் உள்ள முதியவர்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2007ன் கீழ் 187 மனுக்கள் பெறப்பட்டு, 182 மனுக்கள் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. என கலெக்டர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் கலெக்டர் (வருவாய்) மரு. என்.ஓ.சுகபுத்ரா இ.ஆ.ப, மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு செயலாளர் சார்பு நீதிபதி ப.சுதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கி.ரெங்கராஜன், வருவாய் கோட்டாட்சியர் ரஞ்ஜித், மாவட்ட சமூக நல அலுவலர் கை.ராஜேஸ்வரி, மாவட்ட விளையாட்டு அலுவலர் எஸ்.அந்தோனி அதிர்ஸ்ட்ராஜ் மற்றும் பலர்; கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்ட குரும்பாலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியர்கள் ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா



**பெரம்பலூர்,அக்.02-**

பெரம்பலூர் கலெக்டர் அவர்களின் அறிவுரையின் படி, சுற்றுலாத்துறை சார்பாக உலகச் சுற்றுலா தினம் கொண்டாடப்பட்டது. குரும்பாலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியர்களை ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலாவாக பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள அமோனைட்ஸ் அருங்காட்சியகம் மற்றும் சாத்தனூர் கல்மரப் பூங்கா ஆகிய பகுதிகளுக்கு அழைத்துச் சென்று, சுற்றி காண்பிக்கப்பட்டது. அமோனைட்ஸ் மையத்தில் வைத்து திருச்சிராப்பள்ளி அரசு அருங்காட்சியக காப்பாளர் “அமோனைட் படிவங்கள்” குறித்தும், “புவி சுற்றுலா” (Geo Tourism) குறித்து மாணவர்களுக்கு விளக்கவுரை வழங்கினார்கள்.

மேலும் சாத்தனூர் கல்மரப் பூங்கா பகுதியில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் இணைந்து அப்பகுதியில் தூய்மைப் பணி மேற்கொண்டு பூங்காவில் மரக்கன்றுகளை நட்டு, மக்களிடையே தூய்மையின் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை துறை தலைவர் முனைவர் தி.சுமதி, கல்லூரி பேராசிரியர்கள் முனைவர் இரா.கவிதா, முனைவர் இரா.ரேவதி, ஆனந்தி, உதவி சுற்றுலா அலுவலர் ரா.கார்த்திக் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கந்தர்வகோட்டை தாலுகாவில் மூத்த வாக்காளர்களை கவுரவிக்கும் நிகழ்ச்சி



**கந்தர்வகோட்டை,அக்.02-**

கந்தர்வகோட்டை தாலுகாவில் உள்ள மூத்த வாக்காளர்களை இந்திய தலைமை தேர்தல் ஆணையரின் உத்தரவின் பேரில் கௌரவிக்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது கந்தர்வகோட்டை தாலுகாவில் உள்ள 80 வயதிற்கு மிகுந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில் இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவின் பேரில் கந்தர்வகோட்டை வட்டாட்சியர் ராஜேஸ்வரி ,தேர்தல் துணை வட்டாட்சியர் பாலகிருஷ்ணன் ஆகியோர் வயது முதிர்ந்த வாக்காளர்களை நேரில் சென்று இந்திய தேர்தல் ஆணையத்தின் பாராட்டு சான்றிதழை வழங்கி பொன்னாடை அணிவித்து அவர்களை கௌரவித்தனர், நிகழ்ச்சியில் தேர்தல் உதவி அலுவலர் செந்தில் கந்தர்வகோட்டை கிராம நிர்வாக அலுவலர் அன்பரசி கிராம நிர்வாக உதவியாளர் செந்தில் உள்ளிட்டோர் உடன் இருந்தனர் கந்தர்வகோட்டை தாலுகாவில் வயது முதிர்ந்த 200க்கும் மேற்பட்டவர்களை பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவித்தனர்.

# திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் இளைஞர் திறன் திருவிழா: திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா பங்கேற்பு



**திருவாரூர்,அக்.02-**

திருவாரூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் பயிற்சியானது பத்து வட்டாரங்களிலும் இளைஞர் திறன் திருவிழாவாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்டம் சார்பாக நடத்திட திட்டமிடப்பட்டு நன்னிலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை நடைபெற்றது.

இளைஞர் திறன் திருவிழாவினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டம் - மகளிர் திட்டத்தின் திட்ட இயக்குநர் ஸ்ரீலேகா தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைப்பெற்றது.இதில் 18 வயதுமுதல் 45 வயதிற்குட்பட்ட 5 வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை படித்த ஆண், பெண் இருபாலாருக்குமான இலவச திறன் வளர்ப்பு பயிற்சியினை அளித்திட உள்ளூர் மற்றும் வெளியூரில் உள்ள 40க்கும் மேற்பட்ட பயிற்சிகளை வழங்க கூடிய பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டு நர்சிங், ஹோட்டல் மேனேஜ்மென்ட், தையல், கணினி அடிப்டை பயிற்சி மற்றும் பழுதுபார்த்தல், அழகுகலை, பிட்டர், எலக்ட்ரிசியன்,ஏ.சி. மெக்கானிக் மற்றும் டெக்னீசியன் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளுக்காக சுமார் 400க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு அதில் சுமார் 220 இளைஞர்கள் பயிற்சி பெற தேர்வு செய்யப்பட்டு அதற்கான தேர்வாணைகள் சிறப்பு விருந்தினர்கள் மூலம் வழங்கப் பட்டது. இந்நிகழ்வில் நான் முதல்வன் திட்டம் குறித்த விழிப்புணர்வானது திறன் மேம்பாட்டு கழக உதவி இயக்குநர் செந்தில்குமாரி மற்றும் சிறப்பு விருந்தினராக இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் மேனேஜ்மென்ட் ராஞ்சியிலிருந்து வருகை புரிந்த அவிநாஸ் ஆனந்த் ஆகியோரால் கல்லூரியில் இறுதி யாண்டு படிக்கும் மாணவ - மாணவியர்கள் மத்தியில் எடுத்து ரைக்கப் பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை மகளிர் திட்டம் உதவி திட்ட அலுவலர் தில்லை மணிகண்ணன் செய்திருந்தார்.நன்னிலம் வட்டார இயக்க மேலாண்மை மேலாளர் இராஜப்பிரியா,நன்னிலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் இராமஜெயம்,மாவட்ட திறன் பயிற்சி ஆலோசகர் ஸ்ரீதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# திருவாரூர் நகராட்சி கூட்டத்தில் முதல்வருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம்



**திருவாரூர்,அக்.02-**

திருவாரூர் நகராட்சியின் சாதாரண கூட்டம் தலைவர் புவன பிரியா செந்தில் தலைமையிலும்,துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர்,ஆணையர் பிரபாகரன், மேலாளர் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.இதில் கவுன்சிலர்கள் பிரகாஷ்,செந்தில்,சங்கர்,அசோகன்,சின்னவீரன், வரதராஜன் உட்பட அனைத்து கவுன்சிலர்களும் தங்களது வார்டு பகுதி கோரிக்கைகள் குறித்து பேசியதுடன் நகர் முழுவதும் மழை காலத்திற்கு முன்னதாக பாதாள சாக்கடை மூடிகளை சரி செய்திட வேண்டும்,வடிகால் வசதியினை சரி செய்திட வேண்டும்,நகரில் சுற்றி தெரியும் கால்நடைகளால் விபத்து ஏற்படுவதை கருத்தில் கொண்டு அதனை பிடித்து அப்புறப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும்,நாய் மற்றும் பன்றிகள் தொல்லையை தடுத்திட வேண்டும் போன்ற பல்வேறு பொதுவான கோரிக்கைகள் குறித்தும் பேசினர்.கூட்டத்தில் காலை சிற்றுண்டி திட்டத்தை பள்ளிகளில் துவங்கியுள்ள தமிழக அரசுக்கும்,முதல்வர் மு. க ஸ்டாலினுக்கும் நகராட்சி சார்பில் நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்வது,நகர் முழுவதும் அனைத்து வார்டுகளிலும் தூய்மை பணியாளர்கள் பெயர் பட்டியல் குறித்து கைபேசி எண்ணுடன் பெயர் பலகை வைப்பது மற்றும் நகராட்சியின் 4 எல்லைகளிலும் பெயர் பலகை வைப்பது என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# தஞ்சை வடக்கு மாவட்ட திமுக புதிய நிர்வாகிகள் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**கும்பகோணம்,அக்.02-**

தமிழ்நாடு முதலமைச்சர் – திமுக கழகத் தலைவர் மு க ஸ்டாலின் அறிவிக்கப்பட்ட திமுக தஞ்சை வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் – மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் தலைமையில், கும்பகோணம் மகாமகக் குளம் அருகில் அமைந்துள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்கள்.

அருகில், தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகளான, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் , மாநிலங்களவை உறுப்பினர் மு. சண்முகம் , கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் தமிழக அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன் , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் குட்டி.இரா. தெட்சிணாமூர்த்தி , மாவட்ட கழக அவைத் தலைவர் க.நசீர் முகமது துணைச் செயலாளர்கள் கோவி.அய்யாராசு எஸ்.துரைமுருகன் ஜெயலெட்சுமி நடராசன், பொருளாளர் ஜெ.நடராசன் பொதுக்குழு உறுப்பினர்கள் மருது.நடராஜன் ஜி.கலியமூர்த்தி எல்.இராஜேந்திரன் , ரெ.கருணாநிதி , இரா.அசோக்குமார் ரேவதி நடராசன் , கும்பகோணம் மாநகர திமுக செயலாளர் – மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன் , ஒன்றிய திமுக செயலாளர்கள் சி.அம்பிகாபதி, ஜெ.சுதாகர். கே.முத்துசெல்வம் டி.கணேசன் கோ.தாமரைச்செல்வன் என்.நாசர் , டி.சுரேஷ்குமார் , பி.எஸ்.குமார் மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாநகர – ஒன்றிய திமுக நிர்வாகிகள், மாநகர பகுதி கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

